**Starting Time : 12.17 p.m.**

**01.04.2026 <u>அசல் வழக்கு எண்.132/2003 மற்றும் அசல் வழக்கு எண்.11/2007</u>**

**<u>வா.சா.4</u> திரு.சீனுவாசன் த/பெ. நாராயணசாமி**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> (சாட்சி பிரதிவாதிகள் தரப்பில் மனு செய்து, மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.)**

**1).** நான் என்ன படித்துள்ளேன் என்றால் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வேலை செய்கிறேன் என்றால் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். நான் இந்த அசல் வழக்கு எண்.132/2003ல் 3ம் வாதி என்றால் சரிதான். 1,2 வாதிகள் என் பெற்றோர்கள், 4,5 வாதிகள் என் உடன் பிறந்தோர் என்றால் சரிதான். இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவா சொத்துக்களை நீதிமன்றம் மூலம் பதிவு செய்து தருமாறு பரிகாரம் கேட்டுள்ளோம்.

**2).** இந்த வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் கிரய உடன்படிக்கை, அடங்கல், பட்டா ஆகியவைகளை தாக்கல் செய்துள்ளோம். அடங்கல், பட்டா ஆகியவை யாருடைய பெயரில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதியான கண்ண பிள்ளை என்பவர் பெயரில் உள்ளது. கிரய உடன்படிக்கை எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 17.03.1990ல் எழுதப்பட்டது ஆகும். மேற்படி கிரய உடன்படிக்கையை யார் யாருக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்றால் கண்ண பிள்ளை எனது தகப்பனார் நாராயணசாமி என்பவருக்கு எழுதிக் கொடுத்தார்.

**3).** கிரய உடன்படிக்கை சொத்து விவரம் எந்த சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை, விஸ்தீரணம் 1 ஏக்கர் 67 சென்ட் ஆகும். மேற்படி 1 ஏக்கர் 67 சென்ட் ஒரே விஸ்தீரணமாக உள்ளதா என்றால் ஒரே விஸ்தீரணமாக தான் உள்ளது, நடுவில் ஒரு சிறிய வரப்பு உள்ளது. சமீபத்தில் தான் போடப்பட்டது. எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் 20 ஆண்டுகள் இருக்கும். கிரய

உடன்படிக்கை 1990ல் ஏற்படுத்தப்பட்டது என்றும், தாவா சொத்துக்களின் அனுபவம் எங்களிடத்தில் உள்ளது என்று கூறியுள்ளபட்சத்தில், மேற்படி அனுபவத்தை காட்ட அடங்கல் எங்கள் பெயரில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். எந்த வருடத்திற்கான அடங்கல் தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

**4**). மேற்படி கிரய உடன்படிக்கை ஏற்படுத்தியபோது, நானும் இருந்தேனா என்றால் இருந்தேன். மேற்படி கிரய உடன்படிக்கையில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால், 1ம் பிரதிவாதியின் மருமகனான பி. பெருமாள் என்பவரும், மேற்படி பெருமாள் என்பவரின் மைத்துனரான பெருமாள் என்பவரும், எனது பெரியப்பா பூங்காவனம் என்பவர்களும் சாட்சி கையெழுத்து செய்தார்கள். கே. பெருமாள் என்பவர் எனக்கு மாமா முறை என்றால் சரிதான். கிரய உடன்படிக்கையை யார் எழுதியது என்றால் ஊர் தலைவரான முத்துசாமி எழுதினார். 1990ல் கிரய உடன்படிக்கை ஏற்படுத்திய பிறகு மீண்டும் செல் வைத்தோமா என்றால் 1990ல் வைத்தோம். மேற்படி செல் என்டார்ஸ்மெண்ட்டில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் பி.பெருமாள், கே. பெருமாள் மற்றும் பூங்காவனம் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்தார்கள்.

**5**). முதலில் போட்ட கிரய உடன்படிக்கையில் எவ்வளவு கிரய தொகை குறிப்பிட்டுள்ளோம் என்றால் ரூ.19,205/- ஆகும். எவ்வளவு அட்வான்ஸ் தொகை செலுத்தினோம் என்றால் ரூ.17,000/-செலுத்தினோம். 1990ல் செல் என்டார்ஸ்மெண்ட் செய்தபோது எவ்வளவு தொகை செலுத்தினோம் என்றால் ரூ.1500/-செலுத்தினோம். இரண்டாவது முறையாக எப்போது செல் என்டார்ஸ்மெண்ட் செய்தோம் என்றால் 16.10.1991ல் ஆகும் அதில் ரூ.705/- முழுவதும் செலுத்தி விட்டோம். முதலில் போட்ட கிரய உடன்படிக்கையில் எவ்வளவு காலம் உடன்படிக்கை நிறைவேற்ற குறிப்பிட்டு இருந்தோம் என்றால் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. முதலில் வைத்த செல் என்டார்ஸ்மெண்ட்டில் எவ்வளவு காலம் குறிப்பிட்டு இருந்தோம் என்றால் அதிலும் குறிப்பிடவில்லை. இரண்டாவது முறையாக வைத்த செல்

என்டார்ஸ்மெண்ட்டில் உடன்படிக்கையை நிறைவேற்ற எவ்வளவு காலம் குறிப்பிட்டு இருந்தோம் என்றால் அதிலும் குறிப்பிடவில்லை.

**6).** பொதுவாக கிரய உடன்படிக்கை ஏற்படுத்தினால் காலம் குறிப்பிடுவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரய உடன்படிக்கை பச்சை பேப்பரில் எழுதினோம் என்றால் **முதலில் சாட்சி சரிதான் என்று கூறிவிட்டு, மீண்டும் முத்திரைத் தாளில் எழுதினோம் என்று கூறினார்**. கிரய உடன்படிக்கை ஏற்படுத்திய பிறகும் 1ம் பிரதிவாதி கண்ண பிள்ளை தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம், சுவாதீனத்தை எங்களிடம் ஒப்படைத்துவிட்டார். சுவாதீனத்தை எங்களிடம் ஒப்படைத்துவிட்டார் என்று கூறியுள்ளபட்சத்தில், கிரய உடன்படிக்கை ஆவணத்திலோ, மற்றும் இரண்டு செல் என்டார்ஸ்மெண்ட்டுகளிலோ சுவாதீனம் ஒப்படைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**7).** ஆவணத்தை பார்த்து சுவாதீனம் ஒப்படைத்ததாக உள்ளதா என்று கூற முடியுமா என்றால் கூற முடியும். எந்த ஆவணம் என்றால் 1990 ஆவணம் ஆகும். 1990ல் இரண்டு ஆவணங்கள் உள்ள நிலையில், எதில் குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் இரண்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி கண்ண பிள்ளை தாவா சொத்துக்களை வேறு யாருக்கும் கிரயம் கொடுத்துள்ளாரா என்றால் நடராஜன் என்பவருக்கு கொடுத்துள்ளார், ஆனால் அது பொய்யான கிரயம் ஆகும். தற்போது தாவா சொத்தில் நடராஜன் தான் பயிர் வைத்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் நடராஜன் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வாதிகளாகிய எங்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான், ஆனால் நாங்கள் நீதிமன்றம் மூலம் பத்திர பதிவு செய்து கொடுத்தால் தான் எங்கள் பெயருக்கு வரும்.

**8).** நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகளில் தாவா சொத்துக்களின் சர்வே எண்ணிற்காக தான் வரி செலுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. என் தகப்பனார் மற்றவர்களிடம் கடன்

கொடுத்து வாங்கும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. நாங்கள் இந்த வழக்கில் தாவா சொத்துக்களை எங்களுக்கு கிரயம் செய்துக் கொடுக்க உத்தரவிடக் கோரியும், சுவாதீனம் ஒப்படைக்கக்கோரியும் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை கிரய உடன்படிக்கை போட்ட பிறகு சுவாதீனம் எங்களிடம் ஒப்படைத்துவிட்டார் என கூறியுள்ளபட்சத்தில், பிறகு எதற்காக சுவாதீன ஒப்படைவு பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் அந்த பரிகாரம் கேட்கவேண்டும் என்பதற்காக அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம். அந்த பரிகாரம் கேட்டுள்ளதால் தாவா சொத்து எங்களுடைய அனுபவத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**9).** நாங்கள் தாக்கல் செய்துள்ள கிரய உடன்படிக்கை ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுடைய நிலத்தின் பக்கத்தில் தாவா சொத்து உள்ளதால் அதை கிரயம் பெறுவதற்காக மோசடியாக கிரய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கண்ணன் என்பவருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் அதை பற்றி தெரியாது, ஆனால் கையெழுத்து போடுவார். 1ம் பிரதிவாதி எப்போது காலமானார் என்றால் ஒரு 7 வருடம் இருக்கும். 1ம் பிரதிவாதி நடராஜன் என்பவருக்கு தாவா சொத்துக்களை கிரயம் செய்துக் கொடுத்ததை பொறுத்து 1ம் பிரதிவாதியிடம் நாங்கள் சென்று கேட்டோமா என்றால் இல்லை, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்ததால் கேட்கவில்லை.

**10).** நடராஜனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோமா என்றால் சேர்த்துள்ளோம், மேலும் அவர் அசல் வழக்கு எண்.11/2007 வழக்கும் எங்கள் மீது தாக்கல் செய்துள்ளார். **மீண்டும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் கேள்வி கேட்டார்,** அசல் வழக்கு எண்.132/2003ல் நடராஜனை தரப்பினராக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. மோசடியாக கிரய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தி தாக்கல் செய்துள்ளதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்தவொரு கிரய ஆவணத்திலும் கால வரையறை குறிப்பிட்டு தான் ஏற்படுத்தவேண்டும் என்றும் அவ்வாறு குறிப்பிடாததால் எங்களது கிரய உடன்படிக்கை ஆவணம் மோசடியானது

என்றும், செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இறுதியாக கிரய உடன்படிக்கை பொறுத்து ஏற்பட்ட செல் என்டார்ஸ்மெண்ட் 1991 என்றும், நாங்கள் வழக்கு 2003ல் தாக்கல் செய்ததனாலும் அது கால வரையறையால் பாதிக்கப் பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**11**). தாவா சொத்து 1ம் பிரதிவாதி கண்ண பிள்ளை என்பவரின் மூதாதையர் சொத்து என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு தெரிந்த வரை கண்ண பிள்ளை தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்து கண்ண பிள்ளை என்பவரின் மூதாதையர் சொத்தா அல்லது அவர் கிரயம் பெற்ற சொத்தா என்பதை குறித்து நாங்கள் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை என்றால் அது என் அப்பாவிற்கு தான் தெரியும். ரோட்டில் இருந்து தாவா சொத்தை தாண்டி தான் எங்களது சொத்திற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தை நடராஜன் அனுபவிப்பது சம்பந்தமாக எங்களுக்கும் அவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவர் தான் என்னை அடித்தார். இதுசம்பந்தமாக எங்கள் இருவருக்கும் இடையே எத்தனை குற்ற வழக்குகள் உள்ளது என்றால் மூன்று வழக்குகள் உள்ளது. மேற்படி மூன்று வழக்குகளும் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான்.

**12**). நடராஜன் எங்கள் மீது தாக்கல் செய்த குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அவ்வாறு ஏதும் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பினோமா என்றால் நாங்கள் தாக்கல் செய்வதற்கு முன்பே 1ம் பிரதிவாதி எங்கள் மீது அசல் வழக்கு எண்.122/2003 தாக்கல் செய்தார், அதற்கு பின்னிட்டு நாங்கள் தாக்கல் செய்தோம். மேற்படி அசல் வழக்கு எண். 122/2003ல் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருந்தார் என்றால் வழக்கு சொத்துக்களில் இருந்து எங்களை காலி செய்ய சொல்லி வழக்கு தாக்கல் செய்திருந்தார். 1ம் பிரதிவாதி வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.122/2003 சம்பந்தப்பட்ட ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கிற்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது பொய்

என்றால் சரியல்ல. கிரய உடன்படிக்கை முன்னிலையில் நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 1.15 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.